**வணக்கம்**

**ஆல் இண்டியா ரேடியோ-புதுச்சேரி**

**மாநிலச் செய்திகள்**

**வாசிப்பவர் நாராயணசாமி**

**தேதி 2.10.2023** **நேரம் மாலை 6.10 மணி**

---

**தலைப்புச் செய்திகள்**

- **தேசத்தந்தை மகாத்மாகாந்தி, முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி, ஆகியோரின் பிறந்தநாள் இன்று நாடு முழுவதும் கொண்டாடப்பட்டது.**
- **பிரதமர் திரு நரேந்திர மோடி ராஜஸ்தான் மாநிலம் சித்தோர்கரில் 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை தொடக்கி வைத்தார்.**
- **ஆயுஷ்மான் பவ இயக்கத்தின் கீழ், இதுவரை, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உடல் உறுப்பை தானம் செய்ய முன்வந்துள்ளதாக மத்திய அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.**
- **ஆசிய விளையாட்டு போட்டியில் ஸ்கெட்டிங் பிரிவில் முதன் முறையாக வெண்கல பதக்கம் வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி பாராட்டு தெரிவித்துள்ளார்.**

**காந்தி ஜெயந்தி 1 (16)**

**தேசப் பிதா மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்படுகிறது. இதனை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள மகாத்மா காந்தியடிகளின் நினைவிடத்தில் குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்தீப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி, மக்களவைத் தலைவர் திரு ஓம்பிர்லா, காங்கிரஸ் தலைவர் திரு மல்லிகார்ஜீன கார்கே மற்றும் மத்திய அமைச்சர்கள் மரியாதை செலுத்தினர்.**

அண்ணலின் பிறந்த நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு விடுத்துள்ள செய்தியில், மகாத்மா காந்தியடிகளின் வாழ்க்கைப் பாதை, அகிம்சை கொள்கை ஆகியவை வாழ்க்கை நெறியை உலக மக்களுக்கு எடுத்துக் காட்டி இருப்பதாக தெரிவித்துள்ளார். வன்முறை அல்லாத உலகை உருவாக்குவதோடு, துப்புறவு பணிகள், மகளிர் மேம்பாடு, சுயசார்பு, பாகுபாடற்ற சமுதாயம், எழுத்தறிவு கொள்கை போன்றவற்றுக்கும் அவர் தமது வாழ்க்கையை அர்ப்பணித்ததாக குடியரசு தலைவர் புகழாரம் சூட்டியுள்ளார்.

குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர் விடுத்துள்ள செய்தியில், விடுதலை, சமத்துவம், சமச்சீரற்ற நிலையை போக்குதல்

<u>காந்தி ஜெயந்தி 2 (17)</u>

போன்ற கொள்கைகளில் அவர் உறுதியாக நின்றார் என தெரிவித்துள்ளார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி வெளியிட்டுள்ள செய்தியில், மனித குலத்திற்கே வழிகாட்டும் உன்னத நெறியை மகாத்மா காந்தி அறிமுகப்படுத்தியதாக குறிப்பிட்டுள்ளார். மகாத்மா காந்தியடிகளின் சிந்தனைகள் ஒவ்வொரு இளைஞருக்கும் ஊக்கமளிப்பதாக உள்ளது என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

தமிழக ஆளுநர் திரு ஆர்.என் ரவி சென்னை காதிபவனில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த காந்தியடிகளின் பிறந்த நாள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். சென்னை எழும்பூரில் உள்ள அரசு அருங்காட்சியகத்தில் அமைக்கப்பட்டுள்ள காந்தியடிகளின் திரு உருவ சிலைக்கு தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி, முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் ஆகியோர் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

இதற்கிடையே, சென்னை கிண்டியில் உள்ள ஆளுநர் மாளிகையில், சுதந்திர போராட்ட தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக தேசத்தந்தை மகாத்மாகாந்தி மற்றும் அறியப்படாத பல்வேறு தியாகிகளின்

*காந்தி ஜெயந்தி* 3 (9)

வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் புகைப்பட கண்காட்சியை ஆளுநர் திரு ஆர் என் ரவி தொடக்கி வைத்தார்.

மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாளை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள ஆகாஷ்வாணி தலைமையகத்தில் சிறப்பு தூய்மை பணிகள் மேற்கொள்ளப்பட்டன. செய்திப்பிரிவின் முதன்மை தலைமை இயக்குநர் டாக்டர் வசுதாகுப்தா, ஆகாஷ்வாணி அலுவலக வளாகத்தில் உள்ள மகாத்மாகாந்தியின் சிலைக்கு மலரஞ்சலி செலுத்தினார்.

மகாத்மாகாந்திடிகளின் 154 ஆவது பிறந்த நாள் இந்தியா மட்டுமன்றி, உலக நாடுகள் பலவற்றிலும் கொண்டாடப்படுகிறது.

*லால்பகதூர் சாஸ்திரி* 1 (17)

முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி, புதுடெல்லியில் உள்ள அன்னாரது நினைவிடத்தில் குடியரசு தலைவர் திருமதி திவுபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு ஜக்திப் தன்கர், பிரதமர் திரு நரேந்திர மோடி ஆகியோர் மலரஞ்சலி செலுத்தினர்.

பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்துள்ள செய்தியில், லால்பகதூர் சாஸ்திரியின் வாழ்வு எளிமையானதாகவும், அர்ப்பணிப்பு உணர்வுடன் இருந்ததாகவும் தெரிவித்துள்ளார். ஜெய் ஜவான்-ஜெய் கிசான் என்ற கொள்கையின் அடிப்படையில் அவர் செயல்பட்டதாகவும் பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கிடையே, சர்வதேச திரைப்பட விழாவில் பங்கேற்பதற்காக உஸ்பெகிஸ்தான் நாட்டுக்கு சென்றுள்ள மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், அங்கு தாஷ்கண்ட் நகரில் அமைக்கப்பட்டுள்ள முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இதுகுறித்து சமுக ஊடகத்தில் அவர் வெளியிட்டுள்ள செய்தியில், நமது முன்னாள் பிரதமர் லால்பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாளில்

*லால்பகதூர் சாஸ்திரி* 2 (5)

உஸ்பெகிஸ்தான் தாஷ்கண்டில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தும் கவுரவத்தை பெற்றுள்ளதாக தெரிவித்துள்ளார். தாஷ்கண்ட் நகரில் உயிர்நீத்த அந்த மகத்தான தலைவர் நமது நாட்டிற்கு வலுவான தலைமையை வழங்கியதாகவும் டாக்டர் எல் முருகன் குறிப்பிட்டுள்ளார்.

*மோடி*1 (17)

ராஜஸ்தான் மாநிலம் சித்தோர்கரில் 7 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தொடக்கி வைத்தார். அப்போது உரையாற்றிய அவர், உள்கட்டமைப்பு, ஒருங்கிணைந்த வளர்ச்சி மற்றும் கல்வி ஆகியவற்றில் மிகப் பெரிய மாற்றத்தை இந்த வளர்ச்சி திட்டங்கள் கொண்டு வரும் என தெரிவித்தார். பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்துவதே தமது அரசின் முக்கிய நோக்கமாக உள்ளது என்று கூறிய பிரதமர், நாடு முழுவதும் வளர்ச்சி பணிகளை மேற்கொள்ள ஆர்வமாக உள்ள மாவட்டங்கள் தேர்வு செய்யப் பட்டுள்ளதாகவும் கூறினார். இத்திட்டத்தின் கீழ் ராஜஸ்தான் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களும் அபிவிருத்தி செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை முக்கிய நோக்கமாக கொண்டு செயல்படும் அதிர்வுரும் கிராம திட்டம் தொடங்கப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்தார். இதன் மூலம், எல்லை கிராமங்கள் மேம்பாடு அடைந்து வருவதாகவும் கூறினார்.

இந் நிகழ்ச்சியில் மெஹ்சானா-பதிண்டா-குர்தாஸ்பூர் கேஸ் பைப் லைன் திட்டத்தை நாட்டுக்கு அர்ப்பணித்த பிரதமர், 4 ஆயிரத்து 500 கோடி

<u>மோடி 2 (5)</u>

ரூபாய் மதிப்பிட்டில் சித்தோர்கர் நீமுச் ரயில் பாதை மற்றும் கோட்டா-சித்தூர்கர் இடையே நீட்டிக்கப்பட்ட மின்மயமாக்கப்பட்ட ரயில் பாதை உட்பட பல்வேறு ரயில்வே திட்டங்களையும் அர்ப்பணித்து வைத்தார். முன்னதாக, சித்தோர்கர் அருகே உள்ள சன்வாரியாசேத் கோவிலில் பிரதமர் பிராத்தனை செய்தார்.

***<u>ஆயுஷ்மான் பவ (13)</u>***

குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கடந்த மாதம் தொடங்கி வைத்த ஆயுஷ்மான் பவ இயக்கத்தின் கீழ், இதுவரை, 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தங்களது உடல் உறுப்புகளை தானம் செய்வதாக உறுதிமொழி எடுத்துள்ளனர் என்று மத்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார். இதுகுறித்து சமுக ஊடகத்தில் பதிவிட்டுள்ள அவர், உடல் உறுப்பு தானம் செய்ய உறுதி மொழி எடுக்குமாறு மக்களை கேட்டுக்கொண்டுள்ளார். கடந்த 2013 ஆம் ஆண்டில் நாடு முழுவதும் சுமார் 5 ஆயிரம் பேர் தங்களது உடல் உறுப்புகளை தானம் செய்ய முன் வந்ததாகவும், அடுத்து வந்த ஆண்டுகளில் இந்த எண்ணிக்கை 15 ஆயிரமாக உயர்ந்துள்ளது. அடுத்த ஆண்டு இறுதிக்குள் உடல் உறுப்பு தானம் செய்பவர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகப்படுத்துவதற்கான முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

புதுச்சேரி காந்தி (14)

அண்ணல் மகாத்மா காந்தியடிகளின் பிறந்த நாள் புதுச்சேரி அரசு சார்பில் இன்று கொண்டாடப்பட்டது. இதனை ஒட்டி, கடற்கரை சாலையில் உள்ள அவரது திரு உருவ சிலைக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி, அமைச்சர்கள் திரு லட்சுமிநாராயணன், திரு ஜெயக்குமார், திரு சாய் ஜெ சரவணன்குமார், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் திரு செல்வகணபதி, அரசு கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கேஎஸ்பி ரமேஷ், திரு லட்சுமிகாந்தன், திரு அசோக்பாபு, காவல்துறை தலைமை இயக்குநர் ஸ்ரீனிவாஸ், அரசு செயலர் திருமதி முத்தம்மா ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதனை தொடர்ந்து, ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிறப்பு நிகழ்ச்சியில் மும்மத பிராத்தனை நடைபெற்றது. பாரதியார் பல்கலைக்கூட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் தேசபக்திப் பாடல்களை இசைத்தனர். புதுச்சேரியில் கதர் மற்றும் கிராம தொழில் வாரிய ஊழியர்கள் பங்கேற்ற இராட்டையில் நூல் நூற்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

காமராஜர் (11)

தமிழக முன்னாள் முதலமைச்சர் காமராஜரின் 49 ஆவது நினைவு தினம் இன்று அனுசரிக்கப்பட்டது. சென்னை கிண்டி காந்தி மண்டபத்தில் அமைந்துள்ள காமராஜரின் திரு உருவ சிலைக்கு தமிழக அமைச்சர் திரு சேகர்பாபு உள்ளிட்டோர் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினர்.

புதுச்சேரியில், பெருந்தலைவர் காமராஜரின் நினைவு நாள் அரசு சார்பாக அனுசரிக்கப்பட்டது. இதனை ஒட்டி, காமராஜர் சாலை-அண்ணாசாலை சந்திப்பில் அமைந்துள்ள அவரது திரு உருவ சிலைக்கு முதலமைச்சர் திரு ரங்கசாமி, அமைச்சர்கள் திரு லட்சுமிநாராயணன், திரு ஜெயக்குமார், திரு சாய் ஜெ சரவணன்குமார், அரசு கொறடா திரு ஏகேடி ஆறுமுகம்,

சட்டமன்ற உறுப்பினர்கள் திரு கேஎஸ்பி ரமேஷ், திரு லட்சுமிகாந்தன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

__*ஆசிய விளையாட்டு*__ __(12)__

சீனாவில் நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டு போட்டியில், ஸ்கேட்டிங் 3 ஆயிரம் மீட்டர் பிரிவில் இந்திய ஆடவர் மற்றும் மகளிர் அணிகள் முதல் முறையாக வெண்கல பதக்கம் வென்றுள்ளன. பதக்கம் வென்ற இந்திய அணிக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு அனுராக் சிங் தாக்கூர் ஆகியோர் பாராட்டு தெரிவித்துள்ளனர். பிரதமர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்பட்ட இந்திய அணிக்கு பாராட்டுகளை தெரிவித்து கொள்வதாகவும், அவர்களது ஊக்கமும், உத்வேகமும் விளையாட்டு வீரர்களுக்கு சிறந்த உதாரணமாக திகழ்வதாகவும் குறிப்பிட்டுள்ளார். ஆசிய விளையாட்டு போட்டியில் இதுவரை இந்தியா, 13 தங்கம், 21 வெள்ளி, 22 வெண்கலம் என 56 பதக்கங்களுடன், பதக்கப் பட்டியலில் 4 ஆவது இடத்தில் உள்ளது.

__*ஜிதேந்திரசிங்*__ __(11)__

மத்திய அரசு பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் 22 இந்திய மொழிகளில் தேர்வுகள் நடத்தப்படும் என்று மத்திய பணியாளர் நலத்துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்துள்ளார். புதுடெல்லியில் நடைபெற்ற இந்திய மொழிகள் குறித்த மாநாட்டில் உரையாற்றிய அவர், இதுவரை, 13 மொழிகளில் மட்டுமே அரசு பணியாளர் தேர்வுகள் நடத்தப்பட்டதாக தெரிவித்தார். மத்திய அரசின் தற்போதைய நடவடிக்கை காரணமாக 22 மொழிகளில் இளைஞர்கள் தேர்வுகளை எழுத முடியும் என்பதோடு மண்டல மொழிகளுக்கும் முக்கியத்துவம் கிடைத்திருப்பதாக கூறினார். பிரதமர் திரு நரேந்திர மோடி

தலைமையிலான மத்திய அரசு மாநில மொழிகளுக்கு முக்கியத்துவம் அளித்து வருவதாகவும் டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.